T. C - 043

018/DD/22

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## GENERAL EDUCATIONAL TEST OF THE S.S.L.C. STANDARD – PAPER-I – GENERAL TAMIL

(Without Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**I. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி :** (6 × 4 = 24)

1. அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூல்கள் யாவை?

2. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்.

3. தி.சொ. வேணுகோபாலன்-குறிப்பு வரைக.

4. வருங்காலத்தில் தேவையென கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளை எழுதுக.

5. நீதி வெண்பா பாடலின் பொருளை எழுதுக.

6. ஐய வினா என்றால் என்ன?

7. ஜெயகாந்தன் எழுதிய குறும்புதினங்கள் சிலவற்றை எழுதுக.

8. தொகாநிலைத் தொடரின் வகைகள் யாவை?

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி :** (6 × 6 = 36)

9. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது

   இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

10. ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

[Turn over

11. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா? என்பது குறித்த சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.

12. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

13. விடையின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

14. கோசல நாட்டில் எவையெல்லாம் இல்லை என கம்பர் கூறுகிறார்?

15. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.

(அ) நிலத்துக்கு அடியில் கிடைக்கும் ________ யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் ________ நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும். (புதையல், புதைத்தல்)

(ஆ) பசுமையான ________ ஐக் ________ கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)

(இ) பொதுவாழ்வில் ________ கூடாது. ________ இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி :** (4 × 10 = 40)

16. பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக :

"தம்பீ? எங்க நிக்கிறே?"

"நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது"

"அங்ஙனக்குள்ளேயே டீ சாப்பிட்டு, பேப்பர் படிச்சிக்கிட்டு இரு..... நா வெரசா வந்துருவேன்"

"அண்ணே சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு !"

"அவம் பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்."

"ரொம்ப சின்ன வயசுல பார்த்ததுண்ணே ! அப்பம் அவனுக்கு மூணு வயசு இருக்கும்"

"இப்ப ஒசரமா வளந்துட்டான் ! ஒனக்கு அடையாளமே தெரியாது ! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி. போனை வையி. நாங் கெளம்பிட்டேன்....."

"சரிங்கண்ணே."

17. ‘பாய்ச்சல்’ கதையில் வரும் நிகழ்வினை கட்டுரை வடிவில் எழுதுக.

18. ‘காலக் கணிதம்’ கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக :

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன் !
புவியில் யானோர் புகழுடை தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம் !
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவை தவ றாயின் எதிர்ப்பதென் வேலை !
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக !

-கண்ணதாசன்

19. பெண் கல்வி-கட்டுரை எழுதுக.

20. ஐவகை திணைக்குரிய கருப்பொருள்களை எழுதுக.